# பெண்தலைமைத்துவ முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் பெண் வலுப்படுத்தலில் நுண்நிதியின் தாக்கம்

**மரியதாஸ் ஜெயசீலன்[1], ஜெயபிரபா சுரேஸ்[2]**

[1] பொருளியல் கற்கைகள் அலகு, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
[2] பொருளியல் துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
*[1]seeluseelan@gmail.com , [2]pjpraba11@yahoo.com.au*

**ஆய்வுச்சுருக்கம் -** நுண்நிதி முயற்சியாளர்களை ஊக்குவிப்பதில் நுண்நிதி நிறுவனங்களின் பங்களிப்பு நடைமுறையில் அதிகளவில் காணப்படுகின்றது. அந்த வகையில் பல நுண்நிதி நிறுவனங்கள் பெண் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் வட்டி வருமானம் மூலம் இலாபம் உழைக்கவும் செய்வதோடு இவ்வாறான நிறுவனங்கள் நுண்நிதியை அதிகளவு கிராமம் மற்றும் நகர் பகுதிகளில் மேற்கொள்கின்றனர். நுண்நிதியானது பெண்முயற்சியாண்மையாளர்களது தொழில் விருத்தி மற்றும் முயற்சியாண்மை வலுப்படுத்தல் என்பவற்றில் எவ்வாறான தாக்கத்தை கொண்டுள்ளது என்பதை கண்டறியும் நோக்கத்தோடு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது. திருகோணமலை பட்டினமும் சூழலும் எனும் பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட பெண் தலைமைத்துவ முயற்சியாண்மையாளர்கள் இவ்வாய்விற்காக உட்படுத்தப்பட்டுள்ளனர். பெண் முயற்சியாண்மையாளர்களிடமிருந்து தரவுகள் கட்டமைக்கப்பட்ட வினாக் கொத்துக்களைப் பயன்படுத்தியும் கலந்துரையாடல்கள் வாயிலாகவும் பெறப்பட்டது. பிற்செலவுச் சமன்பாடு, கருதுகோள் பரிசோதனை மற்றும் பெண் வலுப்படுத்தல் சுட்டி என்பன தரவுப் பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. பிற்செலவு ஆய்வின் முடிவாக முயற்சியாண்மை அபிவிருத்தியை அளவிடுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சார்ந்த மாறியான இலாபத்தில் சாரா மாறிகளான நுண்கடன் அளவு, அனுபவம், சந்தை வாய்ப்புக்கள் என்பன நேரான தாக்கம் செலுத்தும் அதே வேளை தவணைக் கொடுப்பனவு, கல்வி என்பன எதிரான தாக்கத்தை செலுத்துகின்றது என கண்டறியப்பட்டது. மாதிரி உருவின் சரிப்படுத்தப்பட்ட $R^2$ பெறுமதியானது 0.7441 ஆகும். எனவே இவ்வாய்வின் முடிவின் படி முயற்சியாண்மை அபிவிருத்தியில் ஏற்படும் மாறலில் 74%ஆன பங்கினை தெரிவு செய்யப்பட்ட சாராமாறிகள் விளக்கி நிற்கின்றன. நுண்கடனின் பின் ஏற்பட்ட வருமான மாற்றத்தினை கண்டறிவதற்காக கருதுகோள் பரிசோதனை முடிவாக நுண்பாக நிதி பெறு முன் இருந்த வருமானத்தை விட நுண்பாக நிதியின் பிற்பாடு வருமானம் அதிகரித்தமை கண்டறியப்பட்டது. அத்துடன் பெண்வலுப்படுத்தல் சுட்டியின் மூலமாக நுண்பாக நிதி மூலம் பெண்கள் உயர்ந்த நிலையில் நேர்கணியமாக வலுப்படுத்தப்பட்டமையும் கண்டறியப்பட்டது. எனவே பெண் தலைமைத்துவ முயற்சியாண்மையாளர்களது தொழில் விருத்தி மற்றும் வலுப்படுத்தலுக்கானநுண் நிதித் திட்டங்களின் போது பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்கையிலும், பயனாளிகள் நுண்நிதியின் அளவு மற்றும் குறித்த முயற்சியாண்மையை தொடர்பில் பூரணதெளிவு இருக்கும் பட்சத்தில்நுண்நிதி வழங்கலை ஊக்குவிக்க வேண்டும் என கொள்கை வகுப்பாளர்களுக்கு இவ்வாய்வானது பரிந்துரை செய்கின்றது.

**முதன்மைச்சொற்கள்:** பெண்வலுப்படுத்தல், நுண்கடன், முயற்சியாண்மை அபிவிருத்தி, இலாபம், வருமானம்

## I. அறிமுகம்

ஏழைகள், குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் அவர்களது முயற்சியாண்மைக்கு வைப்புக்கள், கடன்கள், கட்டண வசதிகள் மற்றும் காப்புறுதி வசதிகள் உள்ளிட்ட நிதிச்சேவைகளை பரந்த வீச்சில் வழங்கி முயற்சியாளர்களின் வருமான அதிகரிப்புச் செயற்பாடுகளுக்கு உதவுதல் நுண் நிதியிடல் என ஆசிய அபிவிருத்தி வங்கி கூறுகின்றது.[1] முதல், மூலதனம் எதுவுமில்லாத ஏழைப்பெண்கள் தங்கள் சமூக, பொருளாதார, கலாசார நடவடிக்கைகளில் இயலுமையற்றவர்களாக இருக்கின்ற போது, அவர்களது இயலுமை, தெரிவுச்சக்தி முதலியவற்றை விருத்தி செய்து அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல நுண்நிதியிடல் பங்காற்ற முடியும் என ஜோன் குறிப்பிடுகிறார்.இன்று 24% வீட்டுத் துறைகளில் பெண்கள் தலைமை தாங்குகின்றனர் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களிடையே பெண் தொழிலாளர்கள் 36.1% காணப்படுகின்றனர். இலங்கை பெண் வேலையாட்களில் 45.2% சுயதொழில் செய்கின்றனர். அத்தோடு பெண் தொழிலாளர்களின் தொழிலில் முறைசாரா துறைகளில் கொண்டுள்ள பங்களிப்பு 57% காணப்படுகின்றது[2]. கிழக்கிலங்கையின் திருகோணமலையில் நுண்பாக நிதியிடலின் செயற்பாடுகள் பல்வேறு பொருளாதாரத் துறைகளில் காணப்படுகின்றன. இன்று திருகோணமலையில் 53வீதமான பெண்கள் வாழ்கின்றனர். பெண்களது சமூக நிலை மற்றும் அதிகரித்த வாழ்க்கைச் செலவின் விளைவாக அதிகளவில் பெண்களும் முயற்சியாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.எனவே தான் முயற்சியாண்மைக்குரிய மூலதனத்தைபெற நுண்நிதி நிறுவனங்களை நாடுகின்றனர்.

இந்நிலையில் நுண்பாக நிதியின் உதவி மூலம் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக வீட்டுத்தோட்டம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, மட்பாண்ட உற்பத்தி, உணவுற்பத்தி, பதினிடுதல், பொதியிடுதல், தையல், அரிசி வியாபாரம், பாலுற்பத்தி போன்ற முயற்சியாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பயனாளிகள் சுயதொழிலில் உண்மையாக ஈடுபடுதல், கடனைப் பகுதி பகுதியாகக் கட்ட அனுமதித்தல் என்பவற்றால் கடனை மீளப் பெறக் கூடியதாக உள்ளது.

1 Operation Department of Asian Development Bank, 2007
2 Department of census and statistics, 2016

அத்தோடு வட்டி வருமானம், பணம் மீள்சுழற்சி ஆற்றலைக் கொண்டிருத்தல், சமூக சேவையாளனாதல் என்பவற்றினால் கடன் வழங்குனர்கள் கவரப்படுவதுடன் அவர்களும் வெற்றிகரமாக செயற்படுகின்றனர். நுண்நிதியிடல் நடவடிக்கையின் வெற்றிக்கு நிதியினை கைமாற்றும் இரு தரப்பினர்களுக்கிடையிலுள்ள உறவு சுமுகமானதாகவும் செயற்றிறனானதாகவும் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.இன்று உலகளாவிய ரீதியிலும் சரி, இலங்கையிலும் சரி, திருகோணமலையிலும் சரி, பல்வேறு தேவைகளுக்கு மத்தியில் பல்வேறு நுண் நிதிச் செயற்பாடுகள் இடம்பெற்றாலும் இங்கு நுண்நிதியானது செயற்றிறனாக செயற்படுகின்றதா, அவை குறித்த நோக்கினை அடைகின்றதா, அதனூடாக பயனாளிகள் வலுப்படுத்தப்படுகின்றனரா, என்பவை தொடர்பில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும். முன்னைய ஆய்வுகளின் கண்ணோட்டத்தில் நுண்பாக நிதியிடல் தொடர்பான பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் பெரும்பாலானவை உள்நாட்டு ஆய்வுகளுக்கு வழிகாட்டிகளாக உள்ளனவே தவிர அவற்றின் முடிவுகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் உள்ளது. வேறுபட்ட காலநிலை, மூலதன உள்ளீட்டுக் கிடைப்பனவிலான வேறுபாடு,பயனாளிகளின் கல்விமட்ட வேறுபாடு மற்றும் கலாசாரம் முதலிய பல காரணங்கள் இதற்கு காரணமாக அமைகின்றன.

இலங்கையில் செய்யப்பட்ட ஆய்வுகளில் பெரும்பாலானவை குறிப்பிட்ட பிரதேசத்தையும் குறிப்பிட்ட இலக்கையும் அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாக, கரையோர சமூகத்தில் நுண்நிதியின் செயற்றிறனை மதிப்பீடும் பொருட்டு ஆய்வு செய்தமையையும்[1] , ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்பாட்டுத் திணைக்களத்தால் (2007) செய்யப்பட்ட ஆய்வானது இலங்கை முதலிய வளர்ந்து வரும் நாடுகளிடையே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நுண்நிதியிடலின் செயற்றிறனை மதிப்பிடுவதாக அமைந்தமையையும் குறிப்பிடலாம். அந்த வகையில் நுண்நிதியிடலானது பெண் தலைமைத்துவ முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் பெண்வலுப்படுத்தலில் எவ்வாறான தாக்கத்தைக் கொண்டுள்ளது என்பதை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### II. ஆய்வுப்பிரச்சினை

யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தங்களின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகரித்ததுடன், பொறுப்புக்களை ஏற்று குடும்பத்தை கொண்டு நடத்தவேண்டிய நிலைக்கும் பெண்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் பெண்களின் பொருளாதாரப் பங்கும் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது.[3] இப்பெண்கள் கல்வியறிவு குறைவானவர்களாகவும், வறியவர்களாகவும், இருப்பதும் இவர்களது பொருளாதார நடவடிக்கைகள் முறைசாரா துறையோடு (Informal sector) பிணைந்திருப்பதும் Department Of Census &Statistics report,2016 பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் சிக்கலினை தோற்றுவித்துள்ளது. இந்நிலையில் நுண்பாக நிதியின் உதவி மூலம் அவர்களின் முயற்சியாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு அவர்கள் பெற்ற நுண்நிதியானது அவர்களது முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்துள்ளதா? பெண்களை வலுப்படுத்தியுள்ளதா? என்பது இவ் ஆய்வின் பிரச்சினையாகும்.

### III. ஆய்வுவினாக்கள்

- நுண் நிதியிடலானது பெண்தலைமைத்துவ முயற்சியாண்மை அபிவிருத்தியில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகிறது?
- நுண் நிதியிடலானது பெண்வலுப்படுத்தலில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகிறது?

### IV. ஆய்வு நோக்கங்கள்

- நுண்நிதியிடலானது பெண்தலைமைத்துவ முயற்சியாண்மை அபிவிருத்தியில் எவ்வாறான தாக்கத்தைக் கொண்டுள்ளது எனக் கண்டறிதல்.
- நுண்நிதியிடலானது பெண்வலுப்படுத்தலில் எவ்வாறான தாக்கத்தினை கொண்டுள்ளது எனக் கண்டறிதல்.

### V. ஆய்வு முறையியல்

இவ்வாய்விற்காக திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசெயலக பிரிவில் பல்வேறு நுண்நிதிநிறுவனங்கள் பெண்களுக்கு நுண்நிதியை வழங்கினாலும் Berendina நிறுவனம் வழங்கிய நுண்நிதியை பெற்றபெண்தலைமைத்துவ முயற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்பிரதேச செயலகப்பிரிவில் 2016/2017 வரைக்குமான கடன் பெற்ற 1271 நுண்கடன்

Department Of Census &Statistics report,2016

பயனாளிகளில் 100 பயனாளிகள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டனர். கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்டமுதனிலை தரவுகள் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**1. பிற்செலவுப்பகுப்பாய்வு**

பெண் முயற்சியாண்மை அபிவிருத்தியில் நுண்பாக நிதியின் தாக்கம் தொடர்பான பகுப்பாய்விற்கு அரைமடக்கை பன்மடங்கு பிற்செலவுமாதிரியுரு பயன்படுத்தப்பட்டது[2]. பெண் தலைமைத்துவ முயற்சியாண்மையின் அபிவிருத்தியினை அளவிடும் கருவியாக இலாபமானது தெரிவு செய்யப்பட்டுள்ளது. பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட முயற்சியாண்மையின் இலாபத்தின் மீது பின்வரும் காரணிகள் கொண்டுள்ள தாக்கம் பிற்செலவுமாதிரியுரு பின்வறுமாறு பெறப்படுகின்றது.

$$\ln Y = \beta_0 + \beta_1 \text{logloan} + \beta_2 \text{edu} + \beta_3 \text{loglinsamo} + \beta_4 \text{nlab} + \beta_5 \text{mkop} + \beta_6 \text{exp} + \varepsilon \quad (1)$$

Y= இலாபம் (Profit)
x1=நுண்நிதியின்அளவு(loan)
x2=முயற்சியாண்மையாளரின் கல்வி மட்டம் (edu)
x3= தவணைக்கொடுப்பனவு (insamo)
x4=பயன்படுத்தப்படும் ஊழியம் (nlab)
x5=சந்தை வாய்ப்புக்கள் (mkop) (dummy)
x6=அனுபவம் (Exp)
€ =வழுப்பெறுமதி.

**2. சோடியாக்கப்பட்ட t சோதனை (Paired t test)**

நுண்பாக நிதியிடலின் மூலம் பெண் முயற்சியாண்மை யாளர்களின் வருமானத்தில் ஏற்பட்ட பொருளுள்ள முன்னேற்றத்தினை கணிப்பிடுவதற்காக சோடியாக்கப்பட்ட வ சோதனை செய்யப்பட்டுள்ளது. இங்கு இரண்டு சோடியாக்கப்பட்ட t சோதனை செய்யப்பட்டுள்ளது[3]. வருமான மாற்றத்தின் பொருளுள்ள தன்மையினை அடையாளம் காண்பதற்காக நுண்நிதியிடல் செயற்றிட்டத்திற்கு முன்னான வருமானத்தையும் (Ybefore) நுண்நிதியிடல் செயற்றிட்டத்திற்கு பின்னரான வருமானத்தையும் (Yafter) கொண்டு புள்ளிவிபரவியல் மென்பொருள் (STATA) மூலம் வருமான சோடியாக்கப்பட்ட வசோதனை செய்யப்பட்டுள்ளது.எனவே பின்வருமாறு கருதுகோள் உருவாக்கப்பட்டுள்ளது.

சூனியக்கருதுகோள் : $H_0$ : no mean difference of income
மாற்றுக்கருதுகோள் : $H_1$ : positive mean difference of income

இடை வித்தியாசம் (mean difference) என்பது நுண் நிதியிடல் செயற்றிட்டத்திற்கு முந்திய வருமானத்தின் சராசரியானது நுண் நிதியிடல் செயற்றிட்டத்திற்கு பிந்திய வருமானத்தின் சராசரியின் வேறுபாட்டினைக் குறிக்கிறது.

**3. பெண் வலுப்படுத்தல் தொடர்பான பகுப்பாய்வு**

பெண் வலுப்படுத்தலைப் பகுப்பாய்வு செய்வதற்கு பெண் வலுப்படுத்தல் சுட்டி (Women Empowerment Index - WEI) பயன்படுத்தப்பட்டுள்ளது. பெண் வலுப்படுத்தலானது EEI(பொருளாதார வலுப்படுத்தல்),SEI(சமூக வலுப்படுத்தல்),PEI (ஆளுமை வலுப்படுத்தல்) என்பவற்றினூடாக நோக்கப்பட்டுள்ளது. பொருளாதார, சமூக, ஆளுமை வலுப்படுத்தல் குறிகாட்டிகளை தனித்தனியாக அடையாளம் காணுதல். அந்த வகையில் பொருளாதார வலுப்படுத்தலில்தனிப்பட்ட வருமானம், சேமிப்பு, சொத்துக்களின் கொள்வனவு, கல்வி மீதான செலவீடு, நுகர்வுச் செலவு போன்ற 05 குறிகாட்டிகளும், சமூக வலுப்படுத்தலில்சமூக அந்தஸ்து, குடும்ப அந்தஸ்து, சமூக உறவு, குடும்ப உறவு போன்ற 04 குறிகாட்டிகளும் ஆளுமை வலுப்படுத்தலில் தீர்மானம் எடுத்தல், சுயமான செயற்படுதிறன் போன்ற 02 குறிகாட்டிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குறிகாட்டிகள் அடிப்படையில் பெண் முயற்சியாளர்கள் எதிர் கொண்ட வேறுபட்ட தாக்கங்களை கண்டறிதலும், தாக்க அடிப்படையில் அதனை நிறையிடுதலும். நேர்க்கணிய தாக்கப் பெறுமதி, பூச்சியத் தாக்கப் பெறுமதி, எதிர்க்கணியத் தாக்கப் பெறுமதி என்பன முறையே 3,2,1 ஆகிய நிறையிடல் காரணிகளால் (Weighting Factor) நிறையிடப்பட்டுள்ளது. இங்கு பொருளாதார, சமூக, ஆளுமை வலுப்படுத்தல் தொடர்பில் முறையே 5, 4, 2 குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டதால் குறித்த எண்ணிக்கையினால் பிரித்து அவற்றின் சராசரிகள் எடுக்கப்பட்டன. உதாரணமாக, நிறையிடப்பட்ட பொருளாதார வலுவாக்க மொத்தப் பெறுமதியினை 5 ஆல் வகுத்து நிறையிடப்பட்ட பொருளாதார வலுவாக்க சராசரி பெறப்பட்டது.

$$EEI = WEEA / N$$
$$SEI = WSEA / N$$
$$PEI = WPEA / N$$

இங்கு,

*WEEA* = நிறையிடப்பட்ட பொருளாதார வலுவாக்க சராசரி
*WSEA* = நிறையிடப்பட்ட சமூக வலுவாக்க சராசரி
*WPEA* = நிறையிடப்பட்ட ஆளுமை வலுவாக்க சராசரி
*N* = முயற்சியாளரின் மொத்த எண்ணிக்கை

$$WEI = \frac{EEI + SEI + PEI}{3}$$

$2 < WEI < 3$ =நேர்க்கணிய வலுப்படுத்தலினைக் கொண்டுள்ளனர்.
$1 < WEI < 2$ =பூச்சிய வலுப்படுத்தலினைக் கொண்டுள்ளனர்.
$0 < WEI < 1$ = எதிர்க்கணிய வலுப்படுத்தலினைக் கொண்டுள்ளனர்.

### VI. ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடலும்

### 1. பிற்செலவுப் பகுப்பாய்வு

அட்டவணை 01

அரைமடக்கை பன்மடங்கு பிற்செலவுப் பகுப்பாய்வுப் பெறுபேறு

| மாறிகள் | பிற்செலவு குணக மதிப்பு | t பெறுமதி | நிகழ்தகவுப் பெறுமதி | நியமவழு |
|---|---|---|---|---|
| Logloan | 0.7749*** | 5.69 | 0.000 | 0.1360 |
| edu | -0.0212** | -2.07 | 0.041 | 0.0102 |
| Loginsamo | -0.8768*** | -3.95 | 0.000 | 0.2218 |
| nlab | 0.0127 | 0.25 | 0.801 | 0.0502 |
| mkop | 0.2248*** | 2.51 | 0.014 | 0.0896 |
| exp | 0.0579*** | 2.48 | 0.015 | 0.0233 |

***,** என்பன முறையே 1% ,5% பொருண்மை மட்டம்

இலாபத்தின் மீது கடன் ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்குகின்ற பிற்செலவு குணகப்பெறுமதி 0.7749ஆகும். அதாவது ஏனையவை மாறாத நிலையில் கடனின் அளவு ஓர் வீதத்தால் அதிகரிக்கும்போது இலாபமானது 0.7749 வீதத்தால் அதிகரிக்கின்றது. அதிகரிக்கின்றது.இலாபத்தில் கடனின் அளவானது அதிக உணர்திறனைக் கொண்டுள்ளது. ஒரு வீதப் பொருளுண்மை மட்டத்தில் (1% level) இது நேர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. இக் குணகத்தின் நிகழ்தகவு பெறுமதி (p value) 0.000 ஆக காணப்படுவதுடன் இதற்கான வ பெறுமதி 5.69 ஆக அமைந்துள்ளது. இப்பெறுமதி அட்டவனை பெறுமதியை விட அதிகமாகும். கடனின் அளவு அதிகரிக்கும் போது சாத்தியமான முதலீட்டின் அளவு அதிகரிக்கின்றது. முதலீட்டிலான அதிகரிப்பு முதலீட்டிலிருந்தான திரும்பலை அதிகரிக்கின்றது. அதிகரித்த முதலீட்டின் மூலம் தமது தொழிலை மேலும் விருத்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது. தொழில்விருத்தியானது ஏற்படும் போது இலாபம் அதிகரிக்கின்றது. இதனாலேயே இவ்விரு மாறிகளுக்குமிடையில் நேர்க்கணியத் தாக்கம் காணப்படுகின்றது. எனவே பெண் முயற்சியாண்மை மூலமான இலாபத்தில் கடனின் அளவு பிரதான பங்கினைக் கொண்டுள்ளது.

இலாபம் மீது கல்வியானது ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்குகின்ற பிற்செலவு குணகப்பெறுமதி -0.0212ஆகும். இங்கு கல்வியானதுஎதிர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது. ஏனையவை மாறாத நிலையில் கல்விமட்டம் ஓர் ஆண்டாக அதிகரிக்கும்போது இலாபம் -0.0212 வீதத்தால் குறைவடைகின்றது.இக் குணகத்தின் நிகழ்தகவு பெறுமதி (p value) 0.041 ஆக காணப்படுவதுடன் இதற்கான t பெறுமதி -2.07ஆக அமைந்துள்ளது. இப்பெறுமதி அட்டவனை பெறுமதியை விட அதிகமாகும். இலாபத்தில் ஐந்து வீதப் பொருளுண்மை மட்டத்தில் (5% level) இது எதிர்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. இலாபம் கல்வி இவ்விரு மாறிகளுக்குமிடையில் எதிர்க்கணியத் தாக்கம் காணப்படுகின்றது. படித்த பெண்கள் பெண் முயற்சியாண்மை நடவடிக்கைகளில் காணப்படுகின்ற தொழில்களை அதிகம் விரும்புவதில்லை. குறிப்பாகப் படித்த பெண்கள் கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, அரிசி பொதியிடல் முதலிய தொழில்களை விரும்புவதில்லை. எனினும் கடன் பெறக்கூடிய சந்தர்ப்பம், வறுமை முதலிய காரணங்களால் இவர்கள் இத்தகைய தொழில்களைத் தொடங்குகின்றனர். தொடங்கிய தொழிலில் அக்கறையின்மை, ஆர்வமின்மை, முன்னேற்றும் எண்ணமின்மை என்பவற்றைக் காட்டுகின்றனர். அத்தோடு குறித்த தொழிலில் இருந்து கொண்டு பிற தொழிலுக்குமாறுவதற்கு (Insensitive to leave) எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இதனால் முயற்சியாண்மை அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது.

பகுப்பாய்வுப் பெறுபேற்றின் படி இலாபத்திற்கும் தவணைக்கொடுப்பனவுக்குமிடையில் எதிர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது. இலாபம் மீது தவணைக்கொடுப்பனவானது ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்குகின்ற பிற்செலவு குணகப்பெறுமதி -0.8768 ஆகும். இக் குணகத்தின் நிகழ்தகவு பெறுமதி (p value) 0.000 ஆக காணப்படுவதுடன் இதற்கான வ பெறுமதி -3.95 ஆக அமைந்துள்ளது. இப்பெறுமதி அட்டவனை பெறுமதியை விட அதிகமாகும். இங்கு இரு மாறிகளுக்குமிடையில் பொருளுள்ள எதிர்க்கணியத்

தாக்கம் காணப்படுகின்றது. ஏனையவை மாறாத நிலையில் தவணைக்கொடுப்பனவு ஓர் வீதத்தால் அதிகரிக்கும்போது இலாபமானது 0.8768 வீதத்தால் குறைவடைகின்றது. இலாபத்தில்ஒரு வீதப் பொருளுண்மை மட்டத்தில் (1% level) இது எதிர்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. தவணைக்கொடுப்பனவுஇலாபத்துடன் உயரிய எதிரான தாக்கம் கொண்டு காணப்படுகின்றது. தவணைக்கொடுப்பனவு அதிகரிப்பானது முதலீட்டினைக் குறைப்பதோடு முதலீட்டிலிருந்தான திரும்பல் வீதத்தினையும் குறைக்கின்றது. முயற்சியாண்மையாளர்கள் சிறிய அளவிளான இலாபத்தினையே தமது தொழில் மூலம் ஈட்டுகின்றனர். அவ்வாறு ஈட்டிய இலாபத்தில் தாம் பெற்ற கடனுக்காக குறிப்பிட்ட தொகையை செலுத்தும் போது அவர்களுடைய இலாபம் குறைவடையும். இதனாலேயேதான் இவ்விரு மாறிகளுக்குமிடையில் எதிர்க்கணியத் தாக்கம் காணப்படுகின்றது.

பகுப்பாய்வுப் பெறுபேற்றின்படி முயற்சியாண்மை மூலமான இலாபத்தில் தொழிலில் பயன்படுத்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை பொருளுள்ள தாக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை. இந்தப் பெண் முயற்சியாளர்களின் உற்பத்தி நடவடிக்கைகள் ஒரு முறைசார்ந்த விதமாக (Systematic method) காணப்படவில்லை. உள்ளடக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை, தாம் செலவிடும் ஊழிய மணித்தியாலங்கள் என்பன மாறுகின்றபோது அதற்கேற்ப வெளியீட்டின் உத்தம மட்டத்தினை தீர்மானிக்க இவர்கள் முற்படுவதில்லை. யாருடைய கட்டுப்பாட்டிற்கும் (மேற்பார்வை) உட்படாமல் தாம் விரும்பிய ஒரு சிறு அளவில் உற்பத்தியை மேற்கொள்கின்றனர். இதனால் ஊழியர்களின் எண்ணிக்கை பொருளுள்ள தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை.

பெண்முயற்சியாளர்களின் இலாபத்தினை தீர்மானிக்கும் காரணிகளில் சார்ந்த மாறியான இலாபத்தில் சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விளக்குவதற்காக னுரஅஅல பயன்படுத்தப்பட்டுள்ளது.பகுப்பாய்வின் படி இலாபம் மீது சந்தைவாய்ப்பு ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்குகின்ற பிற்செலவு குணகப்பெறுமதி 0.2248 ஆகும். இக் குணகத்தின் நிகழ்தகவு பெறுமதி (p value) 0.014 ஆக காணப்படுவதுடன் இதற்கான வ பெறுமதி 2.51 ஆக அமைந்துள்ளது. இப்பெறுமதி அட்டவனை பெறுமதியை விட அதிகமாகும். அனுபவம் இலாபம் மீதுஐந்து வீதப் பொருளுண்மை மட்டத்தில் (5% level) நேர்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது.ஏனையவை மாறாத நிலையில் சந்தை வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பத்தினை விட சந்தை வாய்ப்பு இருக்கின்ற பொழுது இலாபமானது 0.2248 வீதத்தால் அதிகரிக்கின்றது.

பகுப்பாய்வின் படி இலாபம் மீது அனுபவம் ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்குகின்ற பிற்செலவு குணகப்பெறுமதி 0.0579 ஆகும். இக் குணகத்தின் நிகழ்தகவு பெறுமதி (p value) 0.015 ஆக காணப்படுவதுடன் இதற்கான வ பெறுமதி 2.48 ஆக அமைந்துள்ளது. இப்பெறுமதி அட்டவனை பெறுமதியை விட அதிகமாகும். அனுபவம் இலாபம் மீதுஒருவீதப் பொருளுண்மை மட்டத்தில் (1% level) நேர்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. ஏனையவை மாறாத நிலையில் அனுபவம் ஓர் ஆண்டாக அதிகரிக்கும்போது இலாபமானது 0.0579 வீதத்தால் அதிகரிக்கின்றது. அனுபவமானது அதிகரிக்கும் போது உற்பத்தி திறன், சிறப்புத்தேர்ச்சி என்பன அதிகரிக்கும். இது இலாப அதிகரிப்புக்கு இட்டுச்செல்லும். இதனாலே இவ்விரு மாறிகளிடையே நேர்க்கணிய தாக்கம் காணப்படுகின்றது. அத்துடன் பெண் முயற்சியாளர்களுக்கு அவர்களது தொழில் நடவடிக்கைகளுக்கு ஏற்ப பெரன்டினா நிறுவனமானது பயிற்சி நடவடிக்கைகளை வழங்கியுள்ளது. அத்தோடு வழிகாட்டல், ஆலோசனை என்பவற்றையும் வழங்கிவருகின்றது. இதனால் குறித்த தொழில் தொடர்பில் முன் அனுபவம் இலாபம் மீது 0.0579 அளவிலேயே தாக்கம் செலுத்துகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது பெண்தலைமைத்துவ முயற்சியாண்மைகள் மூலமாக பெறப்பட்ட இலாபம் மீது கடனின் அளவு, சந்தை வாய்ப்பு, அனுபவம் என்பன நேர்க்கணியமாகவும்,தவணைக்கொடுப்பனவு, கல்வி மட்டம் என்பன எதிர்க்கணியமாகவும் தாக்குகின்றது. இவற்றில்கடனின்அளவுஅதிகூடியநேர்தாக்கத்தினைச் செலுத்துகின்றது. எதிர்க்கணியத் தாக்கமுடைய மாறிகளில் தவணைக்கொடுப்பனவானது உயரிய தாக்கத்திறனைக் கொண்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆறு சாரா மாறிகளும் பூச்சியமாக காணப்படும்போது இலாபமானது 7.3131 காணப்படும். முயற்சியாண்மை மூலமான இலாபத்தில் பயன்படுத்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை பொருளுள்ள தாக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

இங்கு இலாபத்தில் தவணைக்கொடுப்பனவானது எதிராக தாக்கம் செலுத்தினாலும் குறிப்பிட்ட கடன் தொகையை செலுத்தும் காலப்பகுதிவரை மாத்திரமே இவ் எதிர்தாக்கம் காணப்படும். கடனை செலுத்திய பின் தவணைக்கொடுப்பனவானது மேலதிக இலாபமாக காணப்படும். அத்தோடு நுண்நிதி மூலம் பெற்ற கடன்தொகையின் மூலமாக பயனாளி முயற்சியாண்மைக்கான சொத்துக்களையும் தனது சொந்த உடைமையாக கொள்வனவு செய்திருப்பார். எனவேதான் நுண்நிதியிடலானது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்ற முடிவுக்கு வரலாம்.

மாதிரி உருவின் சரிப்படுத்தப்பட்ட சு2பெறுமதியானது 0.7441 ஆகும். எனவே இவ்வாய்வின் முடிவின் படி முயற்சியாண்மை அபிவிருத்தியில் ஏற்படும் மாறலில் 74%ஆன பங்கு தெரிவு செய்யப்பட்ட சாராமாறிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. ஆய்வின் முடிவின் படி F பெறுமதி 44.06 ஆகவும் அதன் நிகழ்தகவுப் பெறுமதி 0.000 ஆகவும் அமைந்துள்ளதுடன் குபெறுமதியானதுஅட்டவனைப் பெறுமதியை விட அதிகமாகவும் காணப்படுகின்றது. எனவே இவ்வாய்வில் பெறுமதியானது பொருண்மை தன்மையுடையதாக காணப்படுகின்றது. இவ்வாய்வின் பல்மாறி பிற்செலவு ஆய்வின் முடிவின் படி மாதிரியுரு பொருண்மை தன்மை உடையதாக காணப்படுகின்றது.

**2. சோடியாக்கப்பட்ட t சோதனை**

அட்டவணை 02

வருமான மாற்றத்திற்கான சோடியாக்கப்பட்ட வ சோதனை

| மாறிகள் | மாதிரி எண் | இடை | நியம வழு | நியம விலகல் |
|---|---|---|---|---|
| Yafter | 100 | 15923.3 | 895.8807 | 8958.807 |
| Ybefore | 100 | 9951 | 672.8178 | 6728.178 |
| Different | 100 | 5972.3 | 497.23 | 4972.393 |

pr (T >t ) = 0.0000

t = 12.01

df = 99

கருதுகோளின் படி,

சூனியக்கருதுகோள் : $H_0$: Δμy = 0 (No mean difference in income)

மாற்றுக்கருதுகோள் : $H_1$:Δμy > 0 (positive mean difference in income)

எனவே நுண்நிதி பெறுவதற்கு முன்னரான காலப்பகுதிக்கும் (ybefore) நுண்நிதி பெற்ற பின்னரான காலப்பகுதிக்கும் (Yafter) இடையில் சராசரி வருமான வேறுபாடு காணப்படுகிறது. வலது வால் சோதனை செய்யப்பட்டுள்ளதால் இரண்டு சராசரிக்குமுள்ள வித்தியாசம் நேர்க்கணியமானதாகும் ([Yafter– Ybefore] > 0). செயற்றிட்டத்திற்கு முன் சராசரி வருமானம் 9951 ஆகும். ஆனால் செயற்றிட்டத்திற்கு பிந்திய சராசரி வருமானம் 15923.3ஆகும். ஆகவே செயற்றிட்டத்தினால் உருவாக்கப்ட்ட வருமான அதிகரிப்பு 5972.3 ஆகும்.

ஆகவே $H_0$ சூனியக்கருதுகோள் மறுக்கப்பட்டு $H_1$மாற்றுக்கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே தான் கருதுகோள் முடிவினை நோக்கும் போது நுண்நிதியானது வருமான அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது என்ற முடிவுக்கு வரலாம். முன்னைய ஆய்விலும் வருமானம் அதிகரித்துள்ளமையே கண்டறியப்பட்டது[3,5].

**3. பெண் வலுப்படுத்தல் தொடர்பான பகுப்பாய்வு பொருளாதார வலுப்படுத்தல் சுட்டி (EEI)**

EEI = WEEA / N

இங்கு,WEEA = நிறையிடப்பட்ட பொருளாதார வலுவாக்க சராசரி

N= முயற்சியாளர்களின் மொத்த எண்ணிக்கை

$$EEI = \frac{(1122 + 234 + 11)}{5} \Big/ 100$$

= 271.4 / 100

= 2.714

பொருளாதார வலுப்படுத்தல் சுட்டியானது2< EEI< 3 என்ற வீச்சுக்குள் காணப்படுகின்றது. இது சுட்டுவது யாதெனில் நிறுவனம் வழங்கிய மீள் சுழற்சி நுண்கடன் திட்டத்தின் மூலம் பெண்கள் பொருளாதார வலுப்படுத்தல் தொடர்பில் நேர்க்கணியத் தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

**சமூக வலுப்படுத்தல் சுட்டி (SEI)**

SEI = WSEA / N

இங்கு,

WSEA = நிறையிடப்பட்ட சமூக வலுவாக்க சராசரி

N = முயற்சியாளர்களின் மொத்த எண்ணிக்கை

$$SEI = \frac{(939 + 172 + 1)}{4} \Big/ 100$$

= 276.25 / 100

= 2.7625

சமூக வலுப்படுத்தல் சுட்டியானது 2<SEI<3 என்ற வீச்சுக்குள் காணப்படுகின்றது. இது குறிப்பது யாதெனில் குறித்த நுண்கடன் திட்டத்தின் கீழ் பெண்கள் சமூக ரீதியாக நேர்க்கணியமாக வலுப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதாகும்.

ஆளுமை வலுப்படுத்தல் சுட்டி (PEI)

PEI = WPEA / N

இங்கு, WPEA = நிறையிடப்பட்ட ஆளுமை வலுவாக்க சராசரி

N = முயற்சியாளர்களின் மொத்த எண்ணிக்கை

$$PEI = \frac{(483 + 78 + 0)}{4} \Big/ 100$$

= 280.5 / 100

= 2.8050

ஆளுமை வலுப்படுத்தல் சுட்டியானது மூன்றினை மிகவும் அண்மித்ததாக காணப்படுகின்றது. எனவே குறித்த கடன் திட்டத்தின் மூலம் மிக அதிகமான பெண்கள் ஆளுமை ரீதியாக நேர்க்கணியமாக வலுப்படுத்தப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 95 வீதமானவர்கள் ஆளுமை வலுப்படுத்தலுக்கு நேர்க்கணியமாக உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆளுமை வலுப்படுத்தலில் நிறுவனம் மேற்கொண்ட கடன் திட்டம் அதியுயர் நேர்க்கணியத் தாக்கத்தினைக் கொண்டுள்ளது.

**பெண்வலுப்படுத்தல் சுட்டி (WEI)**

$$WEI = \frac{EEI + SEI + PEI}{3}$$

$$= \frac{2.714 + 2.7625 + 2.8050}{3}$$

$$= 8.2815 / 3$$

$$= 2.76$$

பெண் வலுப்படுத்தல் சுட்டியின் பெறுமதியானது 2 <WEI< 3 என்ற வீச்சுக்குள் மூன்றினை அண்மித்ததாக காணப்படுகின்றது. நிறுவனம் மேற்கொண்ட நுண்கடன் திட்டத்தின் மூலம் பெண்கள் உயரிய நிலையில், நேர்க்கணியமாக வலுப்படுத்தப்பட்டுள்ளனர். பெண் வலுப்படுத்தலில் குறித்த நுண் நிதியிடல் உயரிய பங்களிப்பினைச் செலுத்தியுள்ளது. முன்னைய ஆய்விலும் இதே போன்று பெண்கள் நேர்கணியமாக வலுப்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது[4,5].

## VII. முடிவுரை

நுண் நிதி பெற்ற திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 11 கிராம சேவைகள் பிரிவுகளில் பெண் முயற்சியான்மை அபிவிருத்தியில் ஈடுபடுகின்ற முயற்சியாளர்கள் குறித்ததாக இவ்வாய்வு அமைந்துள்ளது. பெண்தலைமைத்துவ முயற்சியான்மை அபிவிருத்தி மற்றும் பெண் வலுப்படுத்தலில் நுண்நிதியிடலின் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்வதனை இவ்வாய்வு பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

பெண்முயற்சியாண்மை அபிவிருத்தியில் நுண்பாக நிதியின் தாக்கத்தினை அடையாளப்படுத்த பிரதானமாக பன்மடங்குப் பிற்செலவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. பன்மடங்கு பிற்செலவுப் பகுப்பாய்வின் படி, பெண்முயற்சியாண்மை அபிவிருத்தியை கடன் அளவானது பொருளுள்ள வகையில் நேர்கணியமாகதாக்குகிறது. கடன் தொகை அதிகரிக்க அதிகரிக்க இலாபம் அதிகரிக்கின்றது.அத்தோடு அனுபவம்,சந்தை வாய்ப்புகளும் இலாபத்தில் நேர்க்கணியமான தாக்கத்தினை செலுத்துகின்றது. அதேவேளை தவணைக்கொடுப்பனவும், முயற்சியாளர்களின் கல்விமட்டமும் அதிகரிக்க அதிகரிக்க இலாபம் குறைகின்றது. தொழில் பயன்படுத்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையானதுஇலாபத்துடன் தாக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

கருதுகோள் பரிசோதனையின் மூலம் நுண்பாக நிதிக்கு முன் பெற்ற வருமானம் நுண்பாக நிதிக்கு பின் பெறுகின்ற வருமானம் என்பன பரிசோதிக்கப்படுகின்றன. இங்கு $H_0$வருமானத்தில் மாற்றம் ஏற்படவில்லை எனவும் $H_1$ ஆனது வருமானம் அதிகரித்துள்ளது எனவும் எடுத்துக்கொள்ளப்பட்டது. பரிசோதனை பெறுபேறுகள் வாயிலாக நுண்நிதி பெற்ற பின் வருமானம் அதிகரித்தது என கண்டறியப்பட்டது.

பெண்வலுப்படுத்தல் மட்டத்தினை கணிப்பிடுவதற்கு பெண்வலுப்படுத்தல் சுட்டி பயன்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வலுப்படுத்தல் சுட்டி (2.714) சமூக வலுபடுத்தல் சுட்டி, (2.7625) ஆளுமை வலுப்படுத்தல் சுட்டி (2.8050) என்பன பொருளாதார, சமூக, ஆளுமை ரீதியாக பெண்கள் வலுப்படுத்தபட்டுள்ளனர் என்பதை காட்டுகின்றன. இம்மூன்று சுட்டிகளையும் அடிப்படையாக கொண்டு கணிப்பிடபட்ட பெண்வலுப்படுத்தல் சுட்டிப் பெறுமதிப்படி (2.76) பெண்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளனர். நுண்நிதியிடல் நடவடிக்கை பெண்களை வலுப்படுத்தியுள்ளது.

### VIII. பரிந்துரைகள்

செயற்றிறனான மீள் நிதியினைப் பயன்படுத்துகின்ற அதேவேளை கடனின் அளவு, சந்தை வாய்ப்பு என்பவற்றை அதிகரிப்பதன் மூலம் பெண் முயற்சியாண்மையினை அதிகரிக்க முடியும்.

65% முயற்சியாண்மையாளர்கள் தவணை கொடுப்பனவை செலுத்த தவறியுள்ளனர். இவர்கள் ஒரு மாத தவணை செலுத்துதலை கொடுக்க தவறியுள்ளனர். எனினும் முயற்சியாண்மையாளர்கள் தமது இயலுமைக்கு ஏற்ற வகையில் கடன்தொகை மற்றும் தவணை செலுத்துதலை தெரிவு செய்தல் என்பன தொழில்விருத்திக்கு இட்டுச்செல்லும்.

பெண்முயற்சியாளர்களின் இலாபம் என்பது சிறியதொகையாகவே இருக்கின்றது. அத்தோடு இவ்விலாபமானது குறிப்பிட்ட கால ஒழுங்கில் தொடர்ச்சியாக கிடைக்கும் என்று கூறமுடியாது இலாபமானது மாற்றமடையலாம். நிறுவனமானது தவணைப்பண தொகையை குறைத்தல் என்பது முயற்சியாண்மையாளர்களுக்கு தொழில் ஊக்குவிப்பாக அமையும்.

அதிகளவானோர் பெறும் நுண்நிதியை முழுமையாக முயற்சியாண்மை நடவடிக்கைகளில் முதலிடுவதில்லை. தமது சுயதேவைக்காகவும் பயன்படுத்துகின்றனர். இதனால் தொழில்விருத்தி பாதிப்படைகின்றது. அத்துடன் தொடர்சியான போக்கில் தொழிலையும் முன்னெடுத்துச் செல்வதில்லை. நிறுவனமானது பயனாளிகள் குறித்த நுண்நிதியை சரியான வகையில் பயன்படுத்துகின்றனரா? தொழிலில் முழுமையாக ஈடுபடுகின்றனரா? என்பதனை கண்காணிக்க உரிய அதிகாரிகளை நியமித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் என்பது பயனாளிகளின் தொழில்விருத்தியின் முன்னேற்றப்பாதைக்கு வழிவகுக்கும்.

நுண் நிதித் திட்டங்களின் போது பயனாளிகளைத் தெரிவு செய்கையில் விதவைகள் மற்றும் கணவனை பிரிந்து வாழ்பவர்கள் போன்றோர்க்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது வருமான மற்றும் சமூக சமநிலையைப் பேண உதவும்.

கடன் திட்டத்தின் கீழ் முயற்சியாளர்கள் முன்னெடுக்கின்ற தொழிலினை ஒரு பகுதியளவான தொழிலாக பேணுவதனைத் தவிர்த்து, விரிவுபடுத்தி, பிரதான வருமான மூலாதாரமாக ஈடுபடத் தூண்டுவதற்கான விழிப்புணர்வுகளைச் செய்வது முதலீட்டிலிருந்தான திரும்பலை அதிகரிக்க உதவும்.

### உசாத்துணைகள்

1. Thilepan, M. and Thiruchelvam, S., 2011. Microfinance and livelihood development in poor coastal communities in Eastern Sri Lanka. Tropical Agricultural Research, 22(3).
2. Noreen, S., 2011. Role of microfinance in empowerment of female population of Bahawalpur district. In International Conference on Economics and Finance Research (Vol. 4, No. 20, pp. 65-71).
3. Sarumathi, S. and Mohan, K., 2011. Role of micro finance in women's empowerment (An empirical study in Pondicherry region rural SHG's). Journal of Management and Science, 1(1), pp.1-10
4. Herath, H.M.W.A., Guneratne, L.H.P. and Sanderatne, N., 2016. Impact of microfinance on women's empowerment: a case study on two microfinance institutions in Sri Lanka. Sri Lanka Journal of Social Sciences, 38(1).
5. Tilakaratna, G., Wickramasinghe, U. and Kumara, T., 2005. Microfinance in Sri Lanka: A household level analysis of outreach and impact on poverty. Colombo: Institute of Policy ளுவரனநைள.
6. Aladuwaka, S. and Momsen, J., 2012. Micro-credit, Poverty Alleviation and Women's Empowerment: A Case Study from Rural Sri Lanka. Different Contexts, Different Facets, p.139.